கராத்தே போட்டியில் வென்றவர்கள் எம்எல்ஏவிடம் வாழ்த்து

▶ கராத்தே போட்டியில் வெற்றி பெற்றவர்கள் செல்வராஜ் எம்.எல்.ஏ.விடம் வாழ்த்து பெற்றனர்.

திருப்பூர், ஆக. 29: கர்நாடக மாநிலம் மைசூரில் நடைபெற்ற ஆல் இந்தியா கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் 20 மாநிலங்களிலிருந்து பல வீரர்கள் பங்கேற்றனர்.

இதில், திருப்பூரில் உள்ள பூலுவப்பட்டியில் செயல்பட்டு வரும் அர்ஜுனன் மாசிலாஸ் அகாடமி பள்ளியிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். குறிப்பாக, மாணவர் அனுசுராம் 3ம் பரிசையும், அஜய் மற்றும் முகுந்தன் இருவரும் 2ம் பரிசையும் வென்றுள்ளனர். வெற்றி பெற்ற அனைவரும் பயிற்சியாளர்கள் அர்ஜுன் வசந்தகுமார் தலைமையில் திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் செல்வராஜ் எம்.எல்.ஏ.வை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இதில், வார்டு செயலாளர் மூர்த்தி மற்றும் அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநகர துணை அமைப்பாளர் குணசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தெற்கு குறுமைய அளவிலான எறிபந்து போட்டிகள்

திருப்பூர், ஆக. 29: திருப்பூர் தெற்கு குறுமைய அளவிலான மாணவியர்களுக்கான எறிபந்து போட்டிகள் செரீப் காலனியில் உள்ள தனியார் பள்ளியில் நேற்று நடைபெற்றது.

2024-25ம் கல்வியாண்டிற்கான திருப்பூர் கல்வி மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர் தெற்கு குறுமைய அளவிலான விளையாட்டு போட்டிகளை பெருந்தொழுவு அரசு மேல்நிலைப் பள்ளி பொறுப்பேற்று நடத்துகிறது. அதன் தொடர்ச்சியாக நேற்று திருப்பூர் தெற்கு குறுமைய அளவிலான மாணவியர்கள் அனைத்து பிரிவினருக்கான எறிபந்து போட்டிகள் நடைபெற்றன.

இதில், 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 10 அணிகளும், 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 8 அணிகளும், 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 5 அணிகளும் கலந்து கொண்டன. போட்டிகள் அனைத்தும் நாக் அவுட் முறையில் நடைபெற்றது. போட்டிகளுக்கான விதிமுறைகள் மற்றும் மாணவர்களுக்கான பொதுவான அறிவுரைகளை உடற்கல்வி ஆசிரியர்கள் ராமகிருஷ்ணன் மற்றும் மணிமன்னன் ஆகியோர் கூறினார்கள்.

▶ திருப்பூர் தெற்கு குரு மைய அளவிலான விளையாட்டு போட்டி ஷெரீப் காலனி பகுதியில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில், நடைபெற்ற எறிபந்து போட்டியில் பங்கேற்று விளையாடிய மாணவிகள்.

திருப்பூர் தெற்கு குறுமைய கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் லதா மாதேஸ்வரி, சண்முகநதி மேற்பார்வையில் நடுவர்களாக உடற்கல்வி ஆசிரியர்கள் ஷ்யாம் சகாயராஜ், ஜம்பு, சுந்தரமூர்த்தி, பூமிநாதன், மதுமோகன், வீரக்குமார், கவிப்பிரியா ஆகியோர் பணியாற்றினார்கள். 17 வயதுக்குட்பட்டோருக்கான இறுதி போட்டியில் கிட்ஸ் கிளப் மெட்ரிக் பள்ளி அணி 2க்கு 0 என்ற செட் கணக்கில் லிட்டில் பிளவர் பள்ளி அணியை வென்றது. 19 வயதுக்குட்பட்டோருக்கான இறுதி போட்டியில் பழனியம்மாள் பெண்கள் பள்ளி அணி 2க்கு 1 என்ற செட் கணக்கில் செயிண்ட் ஜோசப் பள்ளி அணியை வென்றது. இந்த போட்டிகளில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சுல்தான் பேட்டை அருகே

மக்களுடன் முதல்வர் முகாம்

சூலூர், ஆக.29: கோவை மாவட்டம் சுல்தான் பேட்டை ஊராட்சி ஒன்றியம் வாரப்பட்டி ஊராட்சி, செலகரிச்சல் ஊராட்சி, அப்பநாயக்கன் பட்டி ஊராட்சி, இடையர்பாளையம் ஊராட்சி, ஆகிய பகுதிகளுக்கான மக்களுடன் முதல்வர் முகாம் சுல்தான் பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை கோவை எம்பி., கணபதி ராஜ்குமார் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

▶ சுல்தான் பேட்டை வாரப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் கணபதி ராஜ்குமார் எம்.பி., கலந்துகொண்டு துவக்கி வைத்தார்.

சுல்தான் பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர்கள் மகாலிங்கம், முத்து மாணிக்கம் மற்றும் வாரப்பட்டி ஊராட்சி தலைவர் கவிதா தர்மராஜ், அப்பநாய்க்கன்பட்டி ஊராட்சி தலைவர் சாந்தி ராஜேந்திரன், தலைமை செயற்குழு சூலூர் உறுப்பினரும் ஒன்றிய குழு உறுப்பினருமான ரகு துரைராஜ், ஒன்றிய கவுன்சிலர் ரங்கசாமி, சுல்தான் பேட்டை மேற்கு ஒன்றிய அவை தலைவர் ராஜேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சூலூர் வருவாய் வட்டாட்சியர் தனசேகரன், சுல்தான்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் ராதா கிருஷ்ணன் ஆகியோர் மக்களுடன் முதல்வர் முகாமிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். இதில் ஊராட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு அணிகளைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று உரிய தீர்வு காண ஏற்பாடு செய்தனர். காவல்துறை, வருவாய்த்துறை, உள்ளாட்சிகள் மற்றும் மருத்துவத்துறை உள்ளிட்ட 15 துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக் கொண்டனர். விழா முடிவில் வாரப்பட்டி தர்மராஜ் நன்றி தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல்

விநாயகர் சிலைகள் வைக்க வேண்டும்

கலெக்டர் அலுவலகத்தில் தி.வி.க. மனு

திருப்பூர், ஆக. 29: திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் திராவிடர் விடுதலை கழக மாவட்ட தலைவர் முகில்ராசு மற்றும் நிர்வாகிகள் ஒரு மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

விநாயகர் சதுர்த்தி விழா வருகிற 7ம் தேதி முதல் 12ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணிகள் தொடங்கி உள்ளன. விநாயகர் சதுர்த்தியின் போது ரசாயனம் பயன்படுத்தப்பட சிலைகளை பயன்படுத்தக்கூடாது. களிமண்ணால் செய்யப்பட்ட சிலைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், பல இடங்களில் இந்த உத்தரவு பின்பற்றப்படுவதில்லை. இதுபோல் ஏற்கனவே வைக்கப்பட்ட இடங்களை தவிர்த்து வேறு இடத்தில் புதியதாக சிலைகள் வைக்க அனுமதி வழங்க கூடாது. பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் சிலைகளை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியிருந்தனர்.

▶ நீர் நிலைகளை மாசு படுத்துவதை தடுக்க கோரி திராவிடர் விடுதலை கழகத்தினர் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்திற்கு நேற்று மனு கொடுக்க வந்திருந்தனர்.

செப்.1ம் தேதி பராமரிப்பு பணிகளால்

சென்னை சென்டரல்-கோயமுத்தூர் ரயில் காட்பாடி வரை மட்டும் இயக்கப்படும்

திருப்பூர், ஆக. 29: அரக்கோணம் ரயில்வே பாதையில், ரயில் போக்குவரத்தில் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், பராமரிப்பு பணிகள் நடந்து வருகின்றன.

செப்டம்பர் 1ம் தேதி கோயம்புத்தூர் - சென்னை இடையே இயங்கும் ரயில் சேவைகள் பகுதியளவில் ரத்து செய்யப்பட்டுள்ளது. அதன்படி கோயமுத்தூர் - சென்னை சென்ட்ரல் இன்டர்சிட்டி அதிவிரைவு ரயில் (எண்:12680) கோயமுத்தூரிலிருந்து காலை 6.20 மணிக்கு புறப்பட்டு காட்பாடி வரை செல்லும், காட்பாடியிலிருந்து சென்னை சென்ட்ரல் வரை இயக்கப்படமாட்டாது. அதே போல், சென்னை சென்ட்ரல் - கோயமுத்தூர் இன்டர்சிட்டி அதிவிரைவு ரயில் (எண்:12679) காட்பாடியிலிருந்து மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு கோயமுத்தூர் வந்தடையும். இந்த ரயில் சென்னை சென்ட்ரல்-காட்பாடி இடையே ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த தகவலை சேலம் ரயில்வே கோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மடத்துக்குளம் அருகே

தேனீக்கள் கொட்டி 20 மாணவிகள் காயம்

மருத்துவமனையில் தீவிர சிகிச்சை

உடுமலை, ஆக. 29: மடத்துக்குளம் அருகே தேனீக்கள் கொட்டி பள்ளி 20 மாணவிகள் காயமடைந்தனர். அவர்களுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது

கணியூர் பேருந்து நிலையம் அருகில் நேற்று மாலை திடீரென கூட்டம் கூட்டமாக தேனீக்கள் பறந்து வந்தன. அப்போது பள்ளி முடிந்து வந்து கொண்டிருந்த மாணவிகளை தேனீக்கள் விரட்டி விரட்டி கொட்டியது. மேலும், அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் அந்த வழியாக சென்றவர்களையும் தேனீக்கள் கொட்டியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அருகில் இருந்தவர்கள் அவர்களை மீட்டு கணியூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், தேனீக்களால் அதிகம் பாதிப்புக்கு உள்ளான 6 பேரை மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்தில் 20க்கும் மேற்பட்டவர்களை தேனீக்கள் கொட்டியுள்ளது. பஸ் நிலையம் அருகில் கட்டப்பட்டிருந்த தேன் கூட்டில் இருந்து தேனீக்கள் கலைந்து வந்து பொதுமக்கள் மற்றும் மாணவிகளை தாக்கியது தெரியவந்துள்ளது. எனவே தேன்கூட்டை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

▶ தேனீக்கள் கொட்டி காயமடைந்த மாணவிகளுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றிய கருத்தரங்கம்

திருப்பூர், ஆக. 29: திருப்பூர், அடுத்துள்ள வஞ்சிபாளையம் தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றிய விரிவுரை கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் ரேச்சல் நான்சி பிலிப் தலைமை தாங்கி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக பாண்டிச்சேரி ராஜீவ் காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கூட்டுறவு மேலாண்மை துறையின் தலைவர் டாக்டர் செல்வராஜ் கலந்து கொண்டு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக நாடுகளின் கூட்டு முயற்சியாக 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றியும், இந்த இலக்குகளை அடையமனிதகுலம் எடுக்க வேண்டிய முயற்சிகளையும் விவரித்து பேசினார். முடிவில் வணிகவியல் துறை தலைவர் காயத்ரி நன்றி கூறினார்.

அதேபோல், நுண்ணுயிரியல் துறை சார்பில் பெண்கள் சம உரிமை தினத்தை கொண்டாடும் விதமாக கருதரங்கம் கல்லூரி வளாகத்தில் நடந்தது.

கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக வழக்கறிஞர் மோனிகா கலந்துகொண்டு பெண்களுக்கான சட்டங்களையும், பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாகும் போது சட்டங்கள் எத்தகைய முறையில் பயன்படுத்துவது என்பதையும் விரிவாக பேசினார். முடிவில் நுண்ணுயிரியல் துறை தலைவர் செல்வ ஜெயந்தி நன்றி கூறினார்.

கிருஷ்ணஜெயந்தி விழா கோலாகலம்

அவிநாசி, ஆக. 29: அவிநாசியில் பழனியப்பா இன்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளியில் 200 குழந்தைகள் ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் ராதை வேடமணிந்து வந்து கிருஷ்ண ஜெயந்தி விழாவை கோலாகலமாக கொண்டாடினர். பழனியப்பா இன்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளியில், கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு பஜனைகள் நடத்தப்பட்டது. இதில், சுமார் 800 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மழலையர் பள்ளியிலிருந்து சுமார் 200 குழந்தைகள் ஸ்ரீகிருஷ்ணர் மற்றும் ராதை வேடமணிந்து கிருஷ்ண ஜெயந்தி விழாவை கோலாகலமாக கொண்டாடினர். கோலாட்டம் மற்றும் கும்மியாட்டம் ஆகியன நடைபெற்றன. முதல்வர் வித்தியாசங்கர் ஸ்ரீ கிருஷ்ணரின் அவதார நோக்கங்கள் மற்றும் சிறப்பு பற்றியும் எடுத்து ரைத்தார். மேலும், மாணவர்கள் பகவத் கீதை ஸ்லோகங்கள் படித்து பயன்பெற வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார்.

திருப்பூரில் விதிமீறி இயக்கிய

2 மினி பஸ்கள் மீது வழக்குப்பதிவு

போக்குவரத்து அதிகாரிகள் நடவடிக்கை

திருப்பூர், ஆக. 29: திருப்பூரில் அரசு மகளிர் கல்லூரி முன்பாக காலை மற்றும் மாலை நேரங்களில் வேறு பகுதிகளில் இயங்கக்கூடிய மினி பஸ்கள் கல்லூரி முன்பாக காத்திருந்து கல்லூரி மாணவிகளை ஏற்று செல்வதாகவும், இதனால் இலவச பஸ்சில் செல்லக்கூடிய கல்லூரி மாணவிகள் கட்டணம் செலுத்தி செல்வதாகவும் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாய குறை தீர்ப்பு கூட்டத்தில் சமூக ஆர்வலர்கள் புகார் தெரிவித்தனர். அதன் அடிப்படையில் திருப்பூர் தெற்கு வட்டார போக்குவரத்து அதிகாரி ஆனந்த் தலைமையில், மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர் நிர்மலா தேவி, வடக்கு வட்டார போக்குவரத்து இன்ஸ்பெக்டர் விஜயா, செந்தில் ராமன் ஆகியோர் திடீரென்று எல்.ஆர்.ஜி மகளிர் கல்லூரி முன்பாகவும், குமரன் கல்லூரி முன்பாகவும் வாகன ஆய்வில் ஈடுபட்டனர். அப்போது, அப்பகுதியில் உரிமம் இல்லாமல் இயக்கிய 2 மினி பஸ்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும், வெவ்வேறு பகுதிகளில் இயக்கக்கூடிய மினி பஸ்களை பிடித்து எச்சரிக்கை கொடுத்து அனுப்பி வைத்தனர்.

SOUTH INDIAN Bank — Experience Next Generation Banking

பிராந்திய அலுவலகம்: கோயம்புத்தூர், PB No. 3868, 1084/1-5, திருச்சி ரோடு, சுங்கம், கோயம்புத்தூர்-18, தமிழ்நாடு. **இமெயில்:** ro1002@sib.co.in, **Tel:** 0422 2303618, **Website:** southindianbank.com, CIN: L65191KL1929PLC001017

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: CBE/RO/REC/MSME&CORP/115/24-25 தேதி: 27.08.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்: **1) M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட்,** அதன் பங்குதாரர்களால் பிரதிநிதித்துவம் பெற்றது, எண்.19-A, சத்திரம் தெரு, உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642126.
2) திருமதி. K.மாணிக்கம், M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட் பங்குதாரர், 124A, அங்காளபரமேஸ்வரி இல்லம், வெஞ்சமடை, வெங்கடேசா மில்ஸ் P.O., உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642128.
3) திரு. S.கருணாகரன், M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட் பங்குதாரர், 124A, அங்காளபரமேஸ்வரி இல்லம், வெஞ்சமடை, வெங்கடேசா மில்ஸ் P.O., உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642128.
4) திருமதி. K.ராணி, M/s. திருமலா எக்ஸ் அன்ட் எக்ஸ்போர்ட் பங்குதாரர், 124B, ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி இல்லம், வெஞ்சமடை, வெங்கடேசா மில்ஸ் P.O., உடுமலைப்பேட்டை, திருப்பூர், தமிழ்நாடு-642128.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., உடுமலைப்பேட்டை கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்-ன் (Secured Creditor) அங்கீரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 26.08.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிட்., உடுமலைப்பேட்டை கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ. 93,87,449.30 (ரூபாய் தொன்னூற்றி மூன்று லட்சத்து எண்பத்தேழாயிரத்து நானூற்றி நாற்பத்தொன்பது மற்றும் பைசா முப்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 17.09.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: **திருமதி. K.மாணிக்கம்**	
சொத்து விபரம்:- திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா, பெரியகோட்டை கிராமம், S.F.Nos.17&18 (புதிய உட்பிரிவு பட்டா எண்.381 மற்றும் 380)-ன் கீழ் அமைந்துள்ள மனை எண்.14-க்குரிய 3680 சதுரடி அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், நடைபாதை மற்றும் வண்டிப்பாதை உரிமைகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் இணைந்துள்ள அனைத்தும் சேர்த்து திருமதி.K. மாணிக்கத்திற்கு சொந்தமான இந்த சொத்து, உடுமலைப்போட்டை சார்பதிவகத்தில் 23.05.2011 தேதியிட்ட கிரையப் பத்திர எண்.4436/2011-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்; வடக்கே: 30 அடி அகல கிழக்கு மேற்கு லே-அவுட் மண் ரோடு, கிழக்கே: மனை எண்.13, தெற்கே: காப்பகத்திற்கு சொந்தமான நிலம், மேற்கே: மனை எண்.15.	
சுவாதீனத்தின் தன்மை	கொள்நிலை சுவாதீனம்
நிர்ணயிக்கப்பட்ட தொகை	**ரூ.28,18,000/-** (ரூபாய் இருபத்தெட்டு லட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	**ரூ.2,81,800/-** (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்தோராயிரத்து எண்ணூறு மட்டும்). EMD 13.09.2024 அன்று மாலை 05:00 மணி அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தப்பட வேண்டும்.
ஏல அதிகரிப்புத் தொகை	**ரூ.50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்).
இ-ஏல தேதி மற்றும் நேரம்	17.09.2024, 12:00 PM - 01:00 PM (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	ஏதுமில்லை
EMD/விற்பனைத் தொகையை சமர்ப்பிக்கும் முறை	EMD மற்றும் விற்பனை தொடர்பாக செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் "The Authorised Officer, The South Indian Bank Ltd." payable at Coimbatore என்ற பெயரில் Demand Draft-ஆகவோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், கோயம்புத்தூர்-திருச்சி ரோடு கிளையின் "அங்கீகாரம் பெற்ற அலுவலரால்" ப்ராமரிக்கப்பட்டு வரும் (IFSC Code: SIBL0000385) கணக்கு எண். 0385073000000927-க்கு RTGS மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.
சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட். உடுமலைப்பேட்டை கிளை Ph: 96333 89323 மற்றும் கோயம்புத்தூர் பிராந்திய அலுவலகம் Ph: 9443759259 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: கோயம்புத்தூர் — **அங்கீகாரம் பெற்ற அலுவலர்**

RELIANCE Asset Reconstruction

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம்: 11 ஆவது தளம், வடக்குப் பக்கம், ஆர்-டெக் பூங்கா, மேற்கு விரைவு நெடுஞ்சாலை, கோரிகான் (கிழக்கு), மும்பை-400063.

கடனீட்டுச் சொத்துகள் மின்-ஏலம் விற்பனை பொது அறிவிப்பு

"ஆர்ஏஆர்சி 068 பொறுப்பாட்சி"யின் பொறுப்பாளர், ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்டரக்சன் கம்பெனி லிட் (ஆர்ஏஆர்சி) ஆனது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உடன் நிறைவேற்றப்பட்ட 30.03.2022 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம், ஒரு உரிமையாற்றோர் மேலும் கீழேக் குறிப்பிட்ட கடன்தாரர்களின் கடனீட்டுக் கடனீந்தோர் ஆகும்.
கீழேக் கையொப்பமிட்டவர் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக வழங்கும் அறிவிப்பாவது கீழேக் குறிப்பிட்டச் சொத்தானது நிலுவைகளை மீட்பதற்காக "இயங்குதள மின்-ஏலம்" மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. சொத்துகள் கீழேக் குறிப்பிட்ட இதர விதிமுறைகளைத் தாண்டி கண்டிப்பாக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உதவிசாரா" அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள் பெயர்	நிலுவைத்தொகைகள்	சுவாதீனம் நாள்
1. ஸ்ரீகிருஷ்ணா & கோ, உரிமையாளர். திருமதி. S.பாலசரஸ்வதி எஸ்.எஃப்.எண்.370/1A, 371/1A உப்பிலிபாளையம் கிராமம், எஸ்ஆர்ஒ, சிங்காநல்லூர், கோயம்புத்தூர்-641015 2. பாலசரஸ்வதி, 155, DPF தெரு, பி.என்.பாளையம், கோயம்புத்தூர்-641037	ரூ.2,56,52,190.66/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து ஆறு லட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து நூற்று தொண்ணூறு மற்றும் பைசா அறுபத்தி ஆறு மட்டும்)	22.06.2023
அசையாச் சொத்துகளின் விவரங்கள்	**நிர்ணய விலை**	**முன்வைப்புத்தொகை**
கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சிங்காநல்லூர் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, உப்பிலிபாளையம் கிராமம் எஸ்.எஃப்.**எண்.370/1A** ஏக்கர் 0.65 மற்றும் 371/A ஏக்கர் 2.29 மொத்தம் ஏக்கர் 2.94 மற்றும் இது 30492 ச.அடி அல்லது 70 சென்ட்கள் அல்லது 2832.798 ச.மீட்டர் பின் வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது. வடக்கு-ரயில் பாதை, தெற்கு- கிழக்கு மேற்கு இட்டேரி, கிழக்கு-கோனார் நீலியப்பாவுக்கு சொந்தமான சொத்து, மேற்கு-மனோரஞ்சிதத்துக்கு சொந்தமான அட்டவணை B சொத்து. இந்த சொத்து கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லையில் உள்ளது.	ரூ.1,00,00,000/- (ரூபாய் ஒரு கோடி மட்டும்)	ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)

ஏலம் நிகழ்ச்சி விவரங்கள்:-
சொத்து பார்வையிடுதல்: 18.09.2024 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை
ஏலப்புள்ளி சமர்ப்பிக்கக் கடைசி நாள்: 19.09.2024
மின்-ஏலம் நாள்: 20.09.2024 பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் (தலா 5 நிமிடங்கள் நீட்டிப்புடன்)

மின்-ஏலம் விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்
1) சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்படாது மேலும் விற்பனையானது கடனீட்டுக் கடனீந்தோராக ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்டரக்சன் கம்பெனி லிமிடெட் (ஆர்ஏஆர்சி) ஒப்புதலுக்கு உட்பட்டது. சொத்துகள் கண்டிப்பாக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உதவிசாரா" அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2) மின்-ஏலம் ஆனது ஆர்ஏஆர்சி-மின் அங்கீகார சேவை வழங்குனர் M/s. ஏஆர்சிஏ இமார்ட் பிரைவேட் லிமிடெட் மூலம் இணையதளம்: https://www.Auctionbazaar.com (ஏஆர்சிஏ இமார்ட் பிரைவேட் லிமிடெட் இணையை முகப்பு) இல் நடத்தப்படும். இயங்குதள மின்-ஏலம் விற்பனை பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் இயங்குதள மின்-ஏலம் ஏலப்புள்ளி படிவம் அடங்கிய மின்-ஏலம் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் ஆனது இணையதளங்கள்: www.rarcl.com மற்றும் https://www.Auctionbazaar.com ஆகியவற்றில் கிடைக்கப்பெறும் திட்டமிடும் ஏலதாரர்கள் உரிய ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம்.
3) திட்டமிடும் ஏலதாரர்கள் உரிய ஆவணங்களை பதிவிறக்கம் செய்யலாம். பங்கேற்பு அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் ஆகியவை மின்-ஏலம் முகமையால் ஏலதாரர் மின்னஞ்சல் முகவரியில் மட்டும் தெரிவிக்கப்படும் என்பதால் திட்டமிடும் ஏலதாரர்கள் ஒரு மதிப்பு மின்னஞ்சல் முகவரியை வைத்திருக்க வேண்டும்.
4) திட்டமிடும் ஏலதாரர்கள் சுய-சான்றுரைக்கப்பட்ட உங்கள் வாடிக்கையாளரை அறிக ஆவணங்களுடன் (பான், ஆதார் அட்டை ஏதேனுமவை) முன்வைப்புத்தொகை செலுத்திய விவரங்களுடன் வரையறுக்கப்பட்ட படிவமாதிரியில் தங்கள் ஏலப்புள்ளியை சமர்ப்பிக்க வேண்டும் மேலும் அது 6 ஆவது தளம், கிவ்மாஜி வளாகம் II, எண் 477-482, அண்ணா சாலை, நந்தனம், சென்னை 600 035 இடத்தில் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்டரக்சன் கம்பெனி லிமிடெடின் (ஆர்ஏஆர்சி) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் மேலும் Satheesh.p,kumar@relianceada.com முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்ப வேண்டும் அதன்பிறகு பங்கேற்ப